**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.12/2020**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதா | மதம் | : இந்து |
| க/பெ | : வெங்கடேசன் | ஜாதி | : -- |
| வயது | : 42 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : நெசவு | வட்டம் | : திருத்தணி |

**03.02.2026**
**பி.வா.சா. 1 மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. தாவா சொத்தின் நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கு சொத்திற்கு என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டு பத்திரம் கொடுத்துள்ளேன். அது என்ன ஆவணம் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. எனவே அதைப்பற்றி சொல்ல தெரியவில்லை. நான் சொல்லும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் அசல் எங்குள்ளது என்றால் வங்கியில் வீடு கட்டுவதற்காக வைத்துள்ளேன். அதை வைத்துதான் வீடு கட்டினோம். எந்த வருடம் வங்கியில் வைத்தோம் என்றால் 2019ல் வைத்தோம். யார் யார் வங்கியில் கையெழுத்து செய்தோம் என்றால் நானும் என் கணவரும் கையெழுத்து செய்தோம். வங்கியில் ஆவணம் வைத்துள்ளோம் என்பதை காட்ட ஏதேனும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் சொல்லும் ஆவணம் எந்த வருட ஆவணம் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. எனவே அதைப்பற்றி சொல்ல தெரியவில்லை. யார் யாருக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் உண்ணாமலையம்மாள் வெங்கடேசலுக்கு எழுதி கொடுத்தார். நான் சொல்லும் உண்ணாமலையம்மாள் வெங்கடேசலுக்கு எழுதி கொடுத்ததாக சொல்வது எந்த வருடம் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை. எனவே அதைப்பற்றி சொல்ல தெரியவில்லை. அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள

நான்குமால் புல எண் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணம் எழுதி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 50 வருடங்களுக்கு மேல் இருக்கும். நான் சொல்லும் ஆவணத்தில் உள்ள நான்கு எல்லைகள் வேறு என்றாலும் வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் வேறு என்றாலும் சரியல்ல.

5. உண்ணாமலையம்மாள் வெங்கடேசலுக்கு எழுதி கொடுத்த ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் என் மீது எழுதியுள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் எனக்கு என்ன ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு அது சொல்ல தெரியாது. என் கணவர் எனக்கு எழுதி கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை நான் வங்கியில் வைத்துள்ளேனா என்றால் இல்லை. 1963ல் எழுதப்பட்ட ஆவணம் கிரைய ஆவணம் என்றால் எனக்கு அது தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கு சொத்திற்குரியது இல்லை என்றாலும் வழக்கு சொத்து எனக்கு பாத்தியம் என்பதை காட்ட நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

6. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. குப்பை செட்டி எங்கு உள்ளார் என்றால் என் மனைக்கு மேற்கே இருந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை. எனது எதிர்வழக்குரையில் வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். அவ்வாறு நீதிமன்ற ஆணையர் கோரி மனு செய்தேனா என்றால் மனு போடவேண்டும் என்று சொன்னேன். ஆனால் இதுவரை அளக்க வரவில்லை. இதுவரை ஏன் நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. உண்மையில் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டால் வழக்கு சொத்தின் உண்மை புல எண் நிலவரம் தெரிந்துவிடும் என்பதால்தான் அளக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மனு போடவேண்டும் என்று சொன்னேன். ஆனால் இதுவரை அளக்க வரவில்லை. என்னிடம் பணம் இல்லை.

7. என்னிடம் போதுமான பணம் இல்லை என்பதால்தான் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி பேருக்கு வழக்கு சொத்தில் பட்டா உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 17.12.2019லேயே வாதி பெயருக்கு வா.சா.ஆ 2 பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. உண்மையான ஆவணங்களின் அடிப்படையில் வாதி பட்டா மாற்றி அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் சொல்வதுபோல் அவர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி பட்டா மாற்றவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து குப்பையா செட்டிக்கு பாத்தியமான சொத்து என்றால் இல்லை. அவர் பக்கத்துவீட்டுக்காரர். அவருக்கும் இந்த சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் குப்பையா செட்டி பக்கத்துவீட்டுக்காரர் என்று சொல்கிறேன் என்றால் அவர் பக்கத்தில் இருப்பதால் அப்படி சொல்கிறேன். அவர் உண்மையிலேயே பக்கத்து வீட்டில் இருந்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. குப்பையா செட்டியின் வாரிசுகளிடமிருந்து வாங்கிய ஆவணத்தை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. குப்பையா செட்டியின் மகள் வாதிக்கு கிரையம் கொடுத்து அதுப்படி வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள்தான் 30 வருடங்களாக அனுபவித்து வருகிறோம். நான் அனுபவித்து வரும் சொத்திற்கு நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் கிழக்கே கோபால் மந்தடி வகையறா, மேற்கே ரோசம்மாளும் நாங்களும், வடக்கே ஆண்டாள், தெற்கே நாகப்பன் உள்ளார். ரோசம்மாள் யார் என்றால் குப்பையா செட்டியின் மகள் ஆவார். அந்த சொத்தின் அளவுகள் சொல்ல முடியுமா என்றால் வடக்கு தெற்கு 100 அடி, கிழமேல் 18 அடி இருக்கும். நான் தற்போது சொன்ன அளவு நான் குடியிருக்கும் வீட்டின் அளவு என்றால் ஆமாம். துளசி வாங்கியுள்ள இடத்தின் அளவு தெரியுமா என்றால் தெரியாது. துளசியம்மாள் வாங்கியுள்ள இடம் என்னுடைய இடம் என எப்படி சொல்கிறேன் என்றால் எனது ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன். நான் ஆவணமே தாக்கல் செய்யாமல் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பழைய ஆவணத்தில் 32 அடி இருப்பதால் அதன் அடிப்படையில் சொல்கிறேன்.

9. நான் சொல்வது 12க்கு 56 அடி அதவாது 36க்கு 162 அடி என வா.சா.ஆ 1 ஆவணத்தில் உள்ள விவரமே தெரியாது என்றாலும் அதில் எத்தனை அடியை என் கணவருக்கு எழுதி கொடுத்தார்கள் என்ற விவரமும் தெரியாது என்றாலும் சரியல்ல. 32

அடி அப்படியே எழுதி கொடுத்துள்ளார். 32 அடிக்கு 100 அடிக்கு என் கணவர் பெயரில் பத்திரம் உள்ளதா என்றால் ஆமாம். அந்த ஆவணம் எங்கு உள்ளது என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கு பத்திரப்படியும் பட்டாப்படியும் உள்ள சொத்தில் எனக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு விவரமே தெரியாமல் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு வீடும் ஒரு காலி மனையும் எங்களுடையது.  துளசி இடம் போக மீதி இடத்தில்தான் நாங்கள் உள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)